## இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

# பரீட்சகரின் அறிக்கை

### மட்டம் I பரீட்சை – 2023 யூலை

## (103) பொருளியல்

---

பெரும்பாலான பரீட்சை எழுதும் மாணவர்கள் வணிகப் பொருளியல் வினாத்தாளுக்கு தரத்திலும் அளவிலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் பதிலளித்துள்ளனர். எவ்வாறாயினும் முழு வினாத்தாளின் விடையளித்திருக்கும் முறையினை ஆய்வு செய்கையில் மாணவர்கள் சில வினாக்களுக்கு தங்கள் முழுமையான பங்களிப்பினை அளிக்காமல் இருப்பதனை காணக்கூடியதாக உள்ளது.

எனவே, மதிப்பீட்டின் போது தேர்வு ஆய்வாளர்களால் அடிக்கோடிட்டுக் காட்டப்பட்ட சில முக்கிய அவதானிப்புகள் பின்வருமாறு.

## பகுதி A

### வினா இல. 01

இந்த பகுதி முழப்பாடத்திட்டத்தினையும் உள்ளடக்கும் விதத்தில் கட்டமைக்கப்பட்டுள்ளதுடன், வினா 1.1முதல்1.10 வரை கொடுக்கப்பட்ட விடைகளிலிருந்து சரியான விடையை தேர்ந்தெடுக்க வேண்டும். வினா 1.11முதல்1.12 வரை கொடுக்கப்பட்ட விடைகளிலிருந்து சரியான விடையை தேர்ந்தெடுக்க வேண்டும். வினா1.13 மற்றும் 1.14 வினாக்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள கூற்றுக்களுக்கு உண்மை அல்லது தவறு என்பதை குறிப்பிடவும். வினா 1.15 முதல் 1.20 வரையிலான வினாக்களுக்கு சுருக்கமான விடைகளை எழுதவும்.

பெரும்பாலான கேள்விகளுக்கு பரீட்சை எழுதும் மாணவர்கள் வெற்றிக்கரமான மதிப்பெண்களை பெற்று இருந்தாலும் மேலும் சிலர் விடைகளை வழங்குவதில் பலவீனங்களை கொண்டிருக்கினர். கீழ்வருவன குறித்த பகுதியின் பொதுவாக காணப்பட்ட தவறுகள் மற்றும் பலவீனங்கள் ஆகும்.

**1.1** இந்த கேள்வியானது உற்பத்தி காரணிகளுக்கான வெகுமதியனை அடிப்படையாக கொண்டதாகும் பெரும்பாலான மாணவர்கள் தொழில்முனைவோருக்கான வெகுமதி என சரியான விடையினை எழுதியிருந்தனர்.

**1.2** இந்த கேள்வியானது உற்பத்திசார்ந்த சமபயன் வளையினை அடிப்படையாக கொண்டதாகும். பெரும்பாலான மாணவர்கள் இந்த கேள்விக்கு சரியான விடையினை எழுதாததுடன் உற்பத்தி சார்ந்த வளையிகள் பற்றிய நுட்பங்கள் சார்ந்த அறிவு மந்தமாக காணப்படுகின்றன.

**1.3** இந்த கேள்வியானது பதீலீட்டு பொருட்களின் நெகிழ்ச்சினை அடிப்படையாக கொண்டதாகும். பெரும்பாலான மாணவர்கள் சரியான விடையினை எடுத்துரைத்து இருந்தனர். அத்துடன் பெரும்பாலான மாணவர்கள் பதீலீட்டு பொருட்களான A மற்றும் B பற்றிய தொடர்பினை நன்றாக புரிந்து விடையளித்து இருந்தனர்.

**1.4** இந்த கேள்விக்கான விடை ஒன்றுக்கு கீழாக காணப்படுவதால் பெரும்பாலான மாணவர்கள் சரியான விடையினை எடுத்துரைத்து இருந்தனர்.

**1.5** இந்த கேள்வியானது ஆண்டு 2022 - பொருளாதார வளர்ச்சி வீதம் பற்றியதாகும். மற்றும் மாணவர்கள் அக்கேள்விக்கு மிக குறைந்தளவிலே சரியான விடையினை அளித்து இருந்ததடன் மத்திய வங்கியின் ஆண்டறிக்கையான செயற்பாட்டு கற்கை நெறியறிவு குறைவாக பயன்படுத்தப்படுள்ளமை தெளிவாக புரிகின்றது.

1.6 இந்த கேள்வியானது எதிர்மறையான பொருளாதார வளர்ச்சி வீதம் பற்றியதாகும். இவ் கேள்விக்கு மாணவர்கள் அளித்த விடைகள் திருப்திகரமானதாக காணப்படவில்லை.

1.7 இக்கேள்வியானது உற்பத்தி கொள்ளளவு வளையின் வலப்புறமான நகர்வினை பற்றியதாகும். பெரும்பாலான மாணவர்கள் அதனை புரிந்து கொண்டு சரியான விடையினை எடுத்துரைத்து இருந்தனர்.

1.8 இந்த கேள்வியானது நிறைபோட்டி சந்தையின் தொடர்பினை பற்றியதாகும். மேலும் பெரும்பாலான மாணவர்கள் கேள்வினை புரிந்து கொண்டு சரியான விடையினை எடுத்துரைத்து இருந்தனர்.

1.9 இந்த கேள்வியானது பணத்தின் தொழிற்பாடு பற்றியதாகும். பெரும்பாலான மாணவர்கள் கேள்வினை புரிந்து கொண்டு சார்புரீதியான அரியாதன்மை மற்றும் பணத்தின் தொழிற்பாட்டு தன்மையையும் சரியாயக புரிந்து கொண்டு சரியான விடை அளித்திருந்தனர்.

1.10 பெரும்பாலான மாணவர்கள் மொத்த நேரடி செலவுகள் மற்றும் கூலிகள் உள்ளடக்கிய நேரில் செலவுகள், மூலப்பொருள் கொள்வனவு, நேரடி செலவுகள் உள்ளடக்கிய தேய்மானம் மற்றும் வங்கி வட்டிக்கான அமையச்செலவு என்பனவற்னை சரியாக கருத்திற்கொண்டு கணிப்பீடு செய்து இருந்தனர்.

**1.11** முதல் **1.12** வரை கொடுக்கப்பட்ட கேள்விகனானது நுண்ணிய பொருளியல் மற்றும் நுண்பக பொருளியல் பற்றியதாகும். பரீட்சை எழுதும் மாணவர்கள் அதனை சரியான விதத்தில் பரிந்து கொண்டு சரி மற்றும் தவறு என்ற ரீதியில் விடைகளை அளித்து இருந்தனர்.

வினா **1.15** முதல் **1.20** வரையிலான வினாக்களுக்கு சுருக்கமான விடைகளை எழுதுமாறு கேட்கப்பட்டிருந்தது.

பொருளாதார பண்டங்களின் பண்புகள், சிலவுரிமை சந்தையின் பண்புகள் மற்றும் குறுகிய மற்றும் விரிந்த பணநிரம்பல்களின் வேறுபாடுகள் போன்றனவற்றை அடிப்படையாக கொண்டு கேட்கப்பட்ட கேள்விகளுக்கு சரியான விடைகளை மாணவர்கள் அளித்திருந்தனர்.

விலைசார்கேள்வி நெகிழ்ச்சினை தீர்மானிக்கும் காரணிகள் மற்றும் குறுங்கால ஓட்டத்திலுள்ள நிறை போட்டி நிறுவனம் ஒன்றினால் எவ்வாறு சமநிலையை அடைந்து கொள்ள முடியும் போன்ற கேள்விகளுக்கான மாணவர்கள் அளித்த விடைகள் திருப்திகரமானதாக காணப்படவில்லை.

இந்த பகுதிக்கு மிக குறைந்த பட்சமான மாணவர்கள் 40 புள்ளிகளை பெற்று இருந்தனர்.

## <u>பகுதி B</u>

### வினா இல. 02

**(a)** பெரும்பாலான மாணவர்கள் சந்தை பொருளாதார முறைமைகள் மற்றும் திட்டமிட்ட பொருளாதார முறைமைகள் மற்றும் அவை எதிர்கொள்ளும் பிரச்சனைகள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகள் போன்றவற்றிற்கு சரியான விதத்தில் விடையளித்து முழு புள்ளிகளை பெற்று இருந்தாலும். சில மாணவர்கள் சந்தை முறைமைகளின் வேறுபாட்டினை கண்டறிந்து விடையளிக்க தவறியிருந்தனர்.

**(b)** உற்பத்தி காரணியான நிலத்தின் பண்புகளை பெரும்பாலான மாணவர்கள் சரியான விதத்தில் விடையளித்து முழு புள்ளிகளை பெற்று இருந்தாலும், சில மாணவர்கள் நிலத்தின் பண்புகளுக்கு பதிலாக பொருளாதார பண்டத்தின் பண்புகள் பற்றிய கேள்வியாக கருதி தவறான விடைகளை அளித்து இருந்தனர்.

**(c)** பொருளியல் என்பது சமூக விஞ்ஞானம் என்பது பற்றிய அக்கேள்விக்கான விடையை சரியான விதத்தில் மனிதன் மற்றும் அவன் சார்ந்த சமூகம் மற்றும் அவை சார்ந்த தாத்தபரியம் மற்றும் பொருளாதார இலக்குகள் என்பனவற்றை புரிந்து கொண்டு பெரும்பாலான மாணவர்கள் விடையளித்து இருந்தாலும், சில மாணவர்கள் இவ் கேள்வியினை அணுகாமல் இருந்தார்கள்

## வினா இல. 03

**(a)** **(i)** பெரும்பாலான மாணவர்கள் சந்தை சமநிலை விலை மற்றும் கணியம் என்பவற்றினை கேள்வி சமநிலை சமன்பாட்டின் மூலம் சரியாக கணிப்பீடு செய்து முழு புள்ளிகளை பெற்றுக்கொண்டாலும். சில மாணவர்கள் சமநிலை சமன்பாடு கணிப்பீட்டில் தவறான விடைகளை அளித்து மதிப்பீடுகளை பெற்றுக்கொள்ளவில்லை.

**(ii)** பெரும்பாலான மாணவர்கள் உற்பத்தி மிகையினை கணிப்பீடு செய்வதில் தவறான விடைகளை சமர்பித்ததுடன் வழங்குனர் வளையியின் நகர்வு பற்றிய போதிய அறிவின்மையினால் வளையி வரைவதில் தவறான கருத்தை முன்வைத்திருந்தனர். அத்துடன் பொதுவாக வழங்குனர் வளையி பற்றிய போதிய தெளிவு எல்லா மாணவர்களும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**(b)** சில மாணவர்கள் வரைபடம் மூலம் தெளிவாக சமநிலை விலை மற்றும் சமநிலை அலகு பற்றி கேள்வி வளையி மற்றும் வழங்குனர் வளையி வலது புற நகரவிற்கு அரசின் மானியத்தினால் ஏற்படுகின்றது என்பதை தெளிவாக புரிந்து கொண்டு எடுத்துரைத்து இருந்தாலும் கேள்வி வளையி நகர்வினை எடுத்துரைதததுடன் வழங்குனர் வளையி நகர்வு எடுத்துரைக்கப்படவில்லை. அத்துடன் சில மாணவர்கள் வரைபடத்தினை வரைந்ததுடன் அதற்கான தெளிவுரை விளக்கங்களை எடுத்துரைக்க தவறிவிட்டனர்.

## வினா இல. 04

**(a)** பெரும்பாலான மாணவர்கள் இக் கேள்விக்கு சரியாக விடையளித்து இருந்ததுடன் இலங்கையின் தற்போதைய பணவீக்க நிலமைகளை எடுத்துரைத்து விடைகளை எழுதியிருந்தனர் மற்றும் மேலும் சிலர் தற்போதைய பணவீக்க நிலையை விளக்காமல் பணவீத்தின் அடிப்படை கருத்தினை முன்வைத்து விடையளித்து இருந்தனர் எவ்வாறாயினும் விடைகள் எதிர்பாத்த அளவில் திருப்தி கரமானதாக காணப்படவில்லை.

**(b)** இக்கேள்வியில் இலங்கையின் தற்போதைய பணவீக்கத்தினை குறைப்பதற்கான வழிமுறைகள் கேட்கப்பட்டிருந்தன, பெரும்பாலான மாணவர்கள் இக் கேள்விக்கு விடையளித்திருந்தாலும் சில மாணவர்கள் மட்டுமே தற்போதைய நிலமையோடு ஒத்து சரியாக விடையளித்து முழு புள்ளிகளை பெற்றுக்கொண்டனர். பெரும்பாலோனோர் கேள்வியை அணுகியருந்தாலும் சரியான விதத்தில் விடையளிக்க தவறியிருந்தனர்.

**(c)** சில மாணவர்கள் மட்டுமே இலங்கையின் பணக்கொள்கையினை ஒப்பீட்டு விடையளித்து இருந்ததுடன் மதிபெண்களை பெற்றனர். இருப்பினும் அதிகூடிய வட்டி வீதம் முதலீட்டாளர்களுக்கு பாதக தன்மையை உருவாக்கும் என்பதனை எடுத்துரைக்கவில்லை. அத்துடன் பெரும்பாலான மாணவர்கள் இக் கேள்விக்கு சரியாக விடையளித்து இருக்கவில்லை.

## வினா இல. 05

**(a)** பெரும்பாலான மாணவர்கள் சென்மதிநிலுவை கணக்கிலுள்ள உருப்படிகளை சரியான முறையில் எடுத்துரைத்து இருந்தாலும். சில மாணவர்கள் தவறாக விடையளித்து இருந்ததுடன், அவர்களுக்கு சென்மதிநிலுவை பற்றிய பூரண அறிவின்மை தெளிவாக தெரிகின்றது.

**(b)** பெரும்பாலான மாணவர்கள் பாதுகாப்புவாதத்திற்கு ஆதரவாக மற்றும் எதிரான கூற்றுகளை சரியான முறையில் விடைகளாக சமர்பித்திருந்தனர். அத்துடன் சிறு தொழில் முதலீட்டார்களே பெரும்பாலும் பாதுகாப்பு வாதத்தில் பங்கெடுப்பதனை மாணவர்கள் நன்றாக அறிந்து வைத்துள்ளனர்.

**(c)** அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாயின் பெறுமதியை மதிப்பிறக்கம் செய்வதால் ஏற்படக் கூடிய பொருளாதார விளைவுகளை பற்றி விபரிக்குமாறு கேக்கப்பட்ட இக்கேள்வியில் சில மாணவர்கள் சரியான விடையளித்திருந்தாலும். பெரும்பாலான மாணவர்கள் தவறான பதிலினை எழுதியிருந்தனர் அத்துடன் இக்கேள்விக்கான பங்களிப்பு மிக குறைவாகவே காணப்படுகின்றது.

## பகுதி C

## வினா இல. 06

**(A)** பெரும்பாலான மாணவர்கள் வணிக சுழற்சியின் கட்டங்களை சரியாக புரிந்து கொண்டு அதன் உச்சம் மற்றும் சுருக்கம் பற்றி விரிவாக எடுத்துரைத்து இருந்தனர். மேலும் சிலர் வரைபடம் மூலம அடிகோடிட்டு மிக தெளிவாக எடுத்துரைத்து இருந்தனர். ஆனால் சிலர் விடையளித்திருந்தாலும் அவர்களிகள் விடைகள் அவர்களுக்கு இவ் வணிக சுழற்சியை பற்றிய போதிய தெளிவின்மையை எடுத்துரைக்கின்றது.

**(B)** பெரும்பாலான மாணவர்களுக்கு தேசிய கணக்கீட்டில் பிரதான உருப்படிகளான பிற வரிகள் கழித்த உற்பத்தி மீதான மானியங்கள் மற்றும் உற்பத்தி மற்றும் இறக்குமதி மீதான நிகர வரிகள் எவ்வாறு எவ்விடத்தில் சரிசெய்ய வேண்டும் என்பது பற்றி தெளிவின்மை காணப்படுகின்றது.

ஆயினும் பெரும்பாலான மாணவர்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தி சந்தைவிலை கணிப்பீட்டில் நிகர வெளிநாட்டு முதன்மை வருமானம் மிகச்சரியான முறையில் சரிசெய்ப்பட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி சந்தைவிலையினை அடைந்திருந்தனர்.

**(C)** பேரீன பொருளாதார துறைக்கு பங்களிப்பு செய்யும் மூன்று பிராதான துறைகள் அடையாளம் காணுமாறு கேட்கப்பட்ட இக்கேள்விக்கு சில மாணவர்களே சரியாக விடையளித்திருந்தனர். பெரும்பாலான மாணவர்கள் தவறான விடைகளையே எடுத்துரைத்து இருந்தனர். ஆனால் இது அடிப்படையில் மிக இலகுவான முறையில் முழு புள்ளிகளையும் அடையக்கூடிய கேள்வியாகும்.

**(D)** ஒடுக்கலான நிதிக்கொள்கை மற்றும் விரிவான நிதிக்கொள்கை தொடர்பான வேறுபாட்டினை விபரிக்குமாறு கேட்கப்பட்ட இக்கேள்விக்கு பெரும்பாலான மாணவர்கள் சரியான விளக்கத்தை எடுத்துரைக்கவில்லை. அத்துடன் மாணவர்களுக்கு தெளிவான ஒடுக்கலான நிதிக்கொள்கை மற்றும் விரிவான நிதிக்கொள்கை பற்றிய வேறுபாடு தெரியவில்லை என்பது அவர்கள் அளித்த விடைகள் மூலம் தெரிகின்றது. மாணவர்கள் இந்த பாடலகினை பற்றி மேலும் விரிவான அறிவினை பெற்று கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

ஒரு சில மாணவர்கள் மட்டுமே இக்கேள்விக்கு முழு புள்ளிகளையும் பெற்றுகொண்டனர்

- - -

**<u>பரீட்சார்த்திகளின் ஆற்றல் மட்டத்தை மேம்படுத்தும் பொருட்டு கவனத்திற் கொள்ள வேண்டிய பொதுவான விடயங்கள்</u>:**

**(1)** பாடத்திட்டத்தை முழுமையாகவும் பூரணமாகவும் படிப்பதுடன் புதிய பாட விடயங்கள் மீது அதிக கவனத்தையும் செலுத்தவும்.

**(2)** மிகக் கவனத்துடன் வினாவை வாசிப்பதுடன், நேரடி விடைகள் எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பத்தில் தேவையற்ற விபரிப்புக்களையோ விபரங்களையோ எழுத வேண்டாம்.

**(3)** வரைவிலக்கணங்களுடன்கூடிய செயல் வினைச்சொல் செவ்வை நிரல் வினாத்தாளுடன் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஒவ்வொரு வினாவும் ஒரு செயல் வினைச் சொல்லைக் கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வை நிரலில் தரப்பட்ட வினைச்சொல் வரைவிலக்கணத்தின் அடிப்படையில் வினாக்களுக்கு விடைளித்தல் வேண்டும்.

**(4)** சுய கற்றல் ஏடு, புத்தகங்கள், கையேடுகள், மடல்கள், சஞ்சிகைகள், மத்திய வங்கி ஆண்டறிக்கைகள் மற்றும் பாடத்துடன் சம்பந்தப்பட்ட ஏனையவற்றை வாசிக்கவும்.

**(5)** வரைபுகளுக்குச் சரியாகப் பெயரிட்டு விபரிப்பதில் கவனம் செலுத்தவும்.

**(6)** கையெழுத்து தெளிவாக இருக்க வேண்டும் என்பதுடன் வினா இலக்கங்கள் துல்லியமாக இடப்படுதல் வேண்டும்.

**(7)** வினாத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.

**(8)** கடந்தகால வினாத்தாள்களைச் செய்து பார்த்து, அவற்றை பரிந்துரைக்கப்பட்ட விடைகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம் அறிவை மேம்படுத்திக் கொள்ளவும்.

**(9)** சரியான நேர முகாமையில் கவனம் செலுத்தவும்.

**(10)** முன்னாயத்தத்துடனும் பரீட்சையை வெற்றிகொள்ளும் எதிர்பார்ப்புடனும் பரீட்சைக்குத் தோற்றவும்.

- * * * -